[11th August 1965

அரசாங்க தொழுநோய் மருத்துவ மனை, எலத்தூர்

* 227 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் எலத்தூர் கிராமத்தில் 1964-ல் அடித்த காற்று மழைக் காரணமாக, அங்குள்ள அரசாங்க தொழு நோய் மருத்துவ மனையில் கூரைகள் சேதமடைந்துள்ளதை அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், எப்போது மராமத்து செய்யப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) போளூர் அரசாங்க மருத்துவ மனை புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால், அதன் பழைய கட்டிடத்திற்கு எலத்தூர் தொழு நோய்க் கட்டுப்பாடு மருத்துவ மனையை மாற்றி விடலாமென்று வட ஆற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரி கருத்து தெரிவித்துள்ளார். இது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட மருத்துவ அதிகாரியின் கருத்து பற்றி முடிவிற்கு வந்த பின், எலத்தூர் தொழு நோய் கட்டுபாடு மருத்துவ மனைக் கட்டிடத்துக்குப் பழுதுபார்ப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அந்தத் தொழு நோய் மருத்துவ மனைக் கட்டடம் கல் கட்டடம் அல்ல. கூரைக் கட்டடம். கூரைக் கட்டடத்திற்கு விழல் நெய்ய 100, 200 ரூபாயாகும். அதைக் கூடப் போடாமல் காற்றில் பறந்து செல்கிற மாதிரியிருக்கிறது அதைப் பார்த்து விட்டுத்தான் கேட்டேன். புதுக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கு சர்க்காருக்கு அபிப்பிராயம் இருந்தால் மாற்றிக் கொள்ளட்டும். அதுவரை அதை உடனடியாக சரிபடுத்த அபிப்பிராயம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரொம்ப பழையதாக போய்விட்டதால் அதில் ஒன்றும் செய்ய முடியாது. அது பழுது பார்க்க இயலாத காரியம். பழுது பார்க்கச் செலவிடும் பணத்தை மற்றபடி நோயாளிகளுக்கு செலவு செய்யலாம். அது போளூர் ஆஸ்பத்திரி இருந்த இடத்திற்கு மாற்றப்படப் போகிறது.

T.B. Sanatorium at Pennathur

* 228 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any building for housing a T.B Sanatorium was built at Pennathur in North Arcot district at a cost of Rs. 6 lakhs; and

(*b*) if so, when will it be opened?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, and

(*b*) The Sanatorium has already been opened.

11th August 1965]

திரு. செ. மாதவன்: இந்த சானட்டோரியத்திற்கு கட்டடம் கட்டி பல மாதங்களாகியும் சர்க்கார் அதை எடுத்துக் கொள்ளாமல் இருந்ததே, அந்த காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : It has since been opened.

ராணி மருத்துவ நிலையம், புதுக்கோட்டை

* 229 **கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டை ராணி மருத்துவ நிலையத்தில் உரிய காலங்களில் கவனிக்கப்படாமையால் இறக்க நேரிட்டவர்கள் குறித்து அண்மையில் முறையீடுகள் ஏதேனும் வந்தனவா?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, and

(*b*) The complaints were thoroughly enquired into and it has been found that there was no lapse on the part of the medical officers and the staff of the institution.

Tuticorin Deep Sea Harbour Project

* 230 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the Tuticorin Deep Sea Harbour Project and the progress made in this regard so far?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A statement [a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன்: இந்தப் ப்ராஜெக்ட்டானது மத்திய அரசாங்க ப்ராஜெக்ட்டாக இருந்தாலும் இதற்கு இணைப்பாக ராஜ்ய சர்க்கார் எடுத்துச் செய்யும்படியான ரோடு வசதி, வாட்டர் சப்ளை வசதி போன்றவை எல்லாம் இந்த எஸ்டிமேட்டிலே சேர்ந்ததா? அல்லது மாநில சர்க்கார் தனியாக செலவழித்துக் கொண்டு வருகிறார்களா? அல்லது இதிலேயே அடங்கியிருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: அமைச்சர் அவர்களால் மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த துறைமுக அபிவிருத்திக்காகவும், தொழிற்சாலைகள் கட்டுவதற்கும் நில ஆர்ஜிதம் செய்வது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 4,478 ஏக்கர்கள் துறைமுகத்திற்காகவும், தொழில்கள் அமைப்பதற்கும், தொழி

---

[a] Printed as Appendix V on pages 778-784.